# சிறுவர் கவிப் பேழை



காப்பியக் கதிரோன். எம்.எம்.ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கவிப்பேழை

காப்பியக்கதிரோன் எம்.எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

- நூலின் பெயர் :- சிறுவர் கவிப்பேழை
- விடயம் :- சிறுவர்களுக்கான பாடல்கள்
- நூலாசிரியர் :- காப்பியக் கதிரோன் எம்.எம்.ஏ.அனஸ்
- உரிமை :- நூலாசிரியருக்கு
- வெளியீடு :- உமர்நெய்னார் புலவர் கழகம், மூதூர்.
- முதற் பதிப்பு :- ஒக்டோபர் 2019
- பிரதிகள் :- 500
- விலை :- 300/=
- ISBN :- 978-955-38066-5-9
- தொடர்புகளுக்கு :- 0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்

1. அமைதிப் பூக்கள் (கவிதை)
2. மூதூர் உமர்நெய்னார் புலவரின் கவிதைகள். (தொகுப்பு)
3. மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராண பதுறுப்படல - உரை நூல் (மறுபதிப்பு)
4. மனிதம். (கவிதை)
5. ஊர் துறந்த காவியம்.
6. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள். (தொகுப்பு)
7. அன்பின் மகனுக்கு. (கடிதங்களின் தொகுப்பு)
8. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர் மடல்.
9. நாயகக் காவியம். (கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது)
10. இஸ்லாமியக் குறள். (காத்தான்குடி பள்ளி வாயல்கள் சங்கங்களின் சம்மேளன விருது பெற்றது)
11. மழலைக் கீதம்.
12. அஷ்ரஃப் அமரகாவியம்.
13. வாப்பு மரைக்கார் வழிக்காவியம்.
14. யதார்த்தம் (கவிதை)
15. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் - ஆய்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள் - ஆய்வு.
17. எந்தன் ஊரே! (கவிதை)
18. வசந்தம் (கவிதை)
19. நண்பனை நவிலும் நா (கவிதை)
20. தங்கத்துரைக் காவியம்.
21. மஜீது மாகாவியம்.
22. அமீன் அருங்காவியம்.
23. படகு மூழ்கிய காவியம்.
24. மூதூர் சுனாமிக் காவியம்.
25. மனையாள் மாட்சிமைக் காவியம்.
26. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்.
27. மூதூர் முன்னேற்றக் காவியம்
28. மூதூர் எம்.எம்.ஏ.அனஸின் நன்னெறிக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே... பக்கம்


- இறைஞ்சல். 12
- நூல் முகக்குறல் 13
- நூல் முகவெண்பா. 13
- சிறுவர் கவிப்பேழை நூல்நோக்கு. 14
- இறையை இறைஞ்சுவோம். 16
- சிறுவர் குறள். 17
- சிறுவர் நன்னெறி வெண்பா. 18
- சிறுவர் கும்மிப்பா. 19
- உலகின் சொர்க்கம் தாய். 20
- ஆசிரியர். 21
- தந்தையை மேலாய் மதிப்போம். 22
- தாய்நாடு. 23
- அமைதி. 24
- புனிதம் காத்து வாழ்ந்திடுவோம். 25
- விவசாயி. 26
- சிறுவர் நன்னெறிப் பாடல். 27
- நாவை நன்கு பேணிடுவோம். 28
- உயிர்கள் மீது இரக்கம் காட்டுவோம். 29
- முயற்சி செய்வோம். 30
- நூல்கள் அதிகம் வாசிப்போம். 31
- பொறுமை காப்போம். 32
- அச்சம் கொள்ளல் ஆகாது. 33
- உள்ளத் தூய்மை. 34
- சுத்தம் பேணி நடப்போம். 35
- கோபம் தவிர்ப்போம். 36
- வீட்டுத் தோட்டம். 37
- போதைப்பொருள் பாவனை தவிர்ப்போம். 38




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளே...** **பக்கம்**



- புகைத்தல் தவிர்ப்போம். 39
- காடழித்தல் தடுப்போம். 40
- டெங்குநோய் பரவாது தடுப்போம். 41
- ஒழுக்கம் பேணுவோம். 42
- கல்வி. 43
- கோபம் கொள்ளல் ஆகாது. 44
- கடற்கரைக் காட்சி. 45
- நல்லார் நட்பு. 46
- கவிஞர் குலாமே! 47
- பாம்புகள் தீண்டும் மறவாதே! 48
- ஈகைப் பண்பு. 49
- மழை. 50
- நன்றியுள்ள மிருகம். 51
- நன்னெறி பற்றி நடப்போம். 52
- பணிவைப் பற்றி நடந்திடுவோம். 53
- எதையும் ஏற்கும் உள்ளம். 54
- பெரியோரை மதிப்போம். 55
- சுதந்திர தினம். 56
- தமிழ், சிங்களப் புத்தாண்டு. 57
- இறைவன் தீர்ப்புக்கஞ்சிடுவோம். 58
- சோம்பல் தவிர்ப்போம். 59
- கடமை காத்து நடப்போம். 60
- கயவர் உறவைத் தவிர்த்திடுவோம். 61
- பிறருக்குத் தீங்கு செய்யாதே. 62
- புத்தகத்தின் மகிமை. 63
- வீதி ஒழுங்கைப் பேணிடுவோம். 64
- வீரம் காப்போம். 65
- சுற்றாடலைக் காப்போம். 66
- சிறுவர் நன்னெறி மாலை. 67




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மனுதர்மத்தை எப்போதும் எனக்கு உபதேசித்து வந்தவரும், உன்னத மனிதத்தின் உருவெனத் திகழ்ந்தவருமான என்னரும் ஆசான் அதிபர் மர்கூடம் A.M. புகாரி அவர்கட்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

சிறுவர்களின் உள்ளத்தில் உன்னதமான எண்ணங்களை நாம் திணிக்க வேண்டுமெனில் அவ்வெண்ணங்களை பாட்டின் மூலமாக, அல்லது சிறிய கதைகளின் மூலமாக உணர்த்துவதுதான் மிகச் சிறந்த வழியாகும். சிறுவர்களின் மனதில் நல்ல எண்ணக்கருக்கள் பாட்டின் மூலமாக பதிந்து விடுமயின் அவர்கள் அவற்றை இலகுவில் மறக்க மாட்டார்கள். இவ்வேளையில் நான் எனது சிறுவயதுப் பருவத்தை எண்ணிப் பார்க்கின்றேன். அன்று நான் சிறுவனாக இருந்த போதில், நான் மிகவும் துடிப்பான சிறுவனாகவும், சுட்டித்தனம் மிக்கவனாகவும் இருந்தேன். அன்று எனது தாய் எனக்கு நல்ல தன்மைகளையும், உணர்வுகளையும் பாட்டின் மூலமாகத்தான் அதிகம் ஊட்டினார்.

இன்றும் அரை நூற்றாண்டுகள் கழிந்தும் அப்பாடல்கள் என் மனதுள் நிறைந்து, எனக்கு நன்னெறியை எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது. எனது தாய் புலவர் உமர்நெய்னாரின் புத்திரி என்ற காரணத்தால் தன் தந்தையூடாக நீதிநெறிப் பாடல்களை அதிகம் அறிந்தவராக இருந்தார். அதனால் அப்பாடல்களை எல்லாம் தன் மைந்தனாகிய எனக்குச் சிறுவயதிலே பாடிப் பாடி எனக்கு நன்னெறிகளை ஊட்டினார். குறிப்பாக

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்."

"தாயில் சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நீதிநெறிப் பாடல்களை பாடித்தான் எனக்கு அறிவுரைகளை அள்ளிச் சொரிவார். இன்று நான் நன்னெறியில் நிலைத்திருப்பதற்கு, என் பாலப் பருவத்தில் என் உள்ளத்தில் பதிந்த அந்த நற்பாடல்கள் தான் அதிக காரணமாய் இருக்கிறதென்பதை என் இதயத்தால் இன்றியம்புகிறேன்.

ஏதோ சிறுவர் இலக்கியம் படைப்பதாக கூறிக்கொண்டு, வெறும் ஓசை நயத்துக்காக மட்டும், அர்த்தமற்ற பாடல்களை கவிஞர்கள் யாப்பது மனித குலத்திற்குச் செய்யும் மாபெரும் கொடுமையாகும் என்றே என் உள்ளம் இயம்புகிறது. சிறுவர் இலக்கியம் என்பது சிறுவர்களின் உள்ளத்தில் உன்னத பண்புகளையும் உயரிய நோக்கங்களையும் உருவாக்க வேண்டும். இவற்றைத்தான் சிறுவர் இலக்கியத்தின் வரைவிலக்கணமாகவும், அளவுகோலாகவும் கொள்ளப்படல் வேண்டும்.

சிறுவர் பருவத்தில் அவர்களின் உள்ளத்தில் எத்தகைய உணர்வுகளையும் மிக இலகுவாகப் பதிக்க முடியும். சிறுவர்களின் உள்ளத்தில் நல்ல சிந்தனைகளையும், நல்லுணர்வுகளையும் சிறுவர் இலக்கியம் உருவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை இந்நூலில் உள்ள 65 பாடல்களும் அதிகம் உணர்த்தி நிற்கின்றன.

சிறுவர் இலக்கியத்திலே நானும் புதிதாக இந்நூலில்

1. சிறுவர் குறள்.
2. சிறுவர் வெண்பா
3. சிறுவர் கும்பிப்பா
4. சிறுவர் நன்னெறிப்பா
5. சிறுவர் நன்னெறி மாலை

போன்ற இலக்கிய வடிவங்களையும் யாத்தளித்துள்ளேன். நிச்சயமாக இவைகள் சிறுவர்களின் உள்ளத்தில் உன்னதமான தன்மைகள் ஏற்பட உந்துசக்தியாகத் திகழும் என்ற திடமான நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குண்டு. ஒவ்வோர் பெற்றோர்களும், ஆசிரியர்களும் முடிந்தவரை எனது இப்பாடல்களைப் படிக்கக் கூடிய வாய்ப்பைத் தனது பிள்ளைகளுக்கும், மாணவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுப்பார்களாயின் அவர்கள் நாளைய சமூகத்தில் உன்னத மனிதர்களாகத் திகழக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் நம்புகின்றேன்.

மேலும் இதில் நான் எழுதியுள்ள வெண்பா, குறள்வெண்பா போன்ற உயர்இலக்கிய வடிவங்களை நான் சிறுவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இலகு தமிழ் வடிவங்களாகவே யாத்துள்ளேன் குறிப்பாக புலவர் ஔவையார் பாடிய

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துணக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா" போன்ற

இலகு தமிழ் வெண்பாவை போலவே நானும் சிறுவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் யாத்துள்ளேன். என் சிறுவர் பருவமும், இளமைப் பருவமும் எனது பெற்றோர்களின் அதிக அறிவுரைகளால் ஆராதிக்கப்பட்ட பருவமாகவே கழிந்தது. எனது தந்தை காலஞ்சென்ற கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்கள் எனக்கு ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து மரணிக்கும் வரை எப்படி நடக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் அறிவுரையாக, கடிதமாக எனக்கு வலியுறுத்தினார்கள். இக்கடிதங்களையும், அறிவுரைகளையும் தொகுத்து "அன்பின் மகனுக்கு"என்ற நூலாகவும் வெளியிட்டுள்ளேன். இந்நூலை வாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்நூல் உயர் வழிகாட்டியாகத் திகழும் என்ற நோக்கோடுதான் இதை நூலுருவில் வெளியீடு செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் என் தந்தை எனக்கு எழுதிய கடிதத்தின் ஒரு வாசகம் என்றும் என் இதயத்தில் இருந்து கொண்டு எனக்கு நன்னெறியை இயம்பிக் கொண்டிருக்கிறது. அவ்வாசகம் இதுதான்

"அன்பின் மகன் அனஸ்

நீ நாளை அரச உயர் பதவி வகிக்கின்றாய் என்றோ! அல்லது மாபெரும் செல்வந்தனாக வாழ்கின்றாய் என்றோ உன் தந்தையாகிய நான் கேள்விப்படுகின்ற போது அடைகின்ற சந்தோசத்தை விடவும் " நீ உலகில் ஓர் கண்ணியமுள்ள மனிதனக வாழ்கின்றாய் என்று அறியும் போது நான் அடைகின்ற சந்தோசம் மிக அதிகமாக இருக்கும்" என்று எழுதினார்கள். இவ்வாசகம் தான் இன்றும் என்னை பிறழ் நடத்தைகளிலிருந்து தவிர்ந்து நடக்கச் செய்து கொண்டிருக்கிறது.

அந்த வகையில் சிறுவர் கவிப்பேழை எனும் எனது இந்நூலில் இடம்பெற்றுள்ள எல்லாப் பாக்களும் சிறுவர்களுக்கு உன்னத நெறியைக் காட்டுமென்ற உறுதியான நம்பக்கை எனக்குண்டு.

நன்றி.

எம்.எம்.ஏ. அனஸ்
20.10.2019

மட்டக்களப்பு வீதி,
பெரிய பாலம்
மூதூர் – 05

தொடர்புகளுக்கு – 0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைஞ்சல்

இறையே! இறைஞ்சி உன்னிடத்தில்
இதயம் நொந்து கேட்கின்றேன்
கறையே அறியாச் சிறார்களெல்லாம்
கண்ணிய நெறிகளின் காவலராய்
முறையாய் வாழ வழிசெய்வாய்!
மேலாம் உன்னருள் புரிந்திடுவாய்!
நிறைவாம் பண்பில் நிலைத்தவர்கள்
நிலத்தினில் ஓங்க அருள்புரிவாய்

(நூலாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் முகக்குறள்

உன்னதமாம் தன்மை உளத்தில் சிறார்க்கமைய
நன்றாம்பா நூலிதை நாடு

(நூலாசிரியர்)

## நூல் முகவெண்பா

உன்னதமாம் கொள்கை உளத்தில் சிறார்களிடை
நன்றெனவே தோன்றியவர் நற்பிரஜை - என்றேதான்
நாட்டினில் வாழ்ந்திட நல்வழியை நூலிதுவும்
காட்டிடும் எனறே கருது.

(நூலாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கவிப்பேழை நூல்நோக்கு

உன்னத கொள்கை மற்றும்
உயரிய தன்மை யாவும்
நன்றெனச் சிறார்கள் உளத்தில்
நிலைத்திட வேண்டும் என்ற
என்னுடை எண்ணம் தன்னால்
எழுதினேன் சிறுவர் கவிப்பே(ழை)
என்றிடும் எழிலுறு கவிகள்
ஏந்திய இந்த நூலை

இன்னதைச் சிறார்கள் எல்லாம்
இனிதுறக் கற்றுத் தேர்ந்து
நன்றாம் மாந்தர் என்று
நாளை நாட்டில் வாழ்க!
என்னுடை நாட்டுக் காக
என்னுடை எழுத்துப் பணியை
அன்றோ அளித்தேன் யானும்
அகமெலாம் உவகை பொங்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடை இந்தப் பாக்கள்
ஏதோ! நாட்டிலோர் சிறுவன்
உன்னத நெறிகள் பற்ற
உதவியாய் அமையும் ஆயின்
நன்றென எந்தன் நோக்கு
நிலமிசை ஜெயித்த தென்று
பென்னம் பெரிதாம் மகிழ்வாய்
பெருமையே கொள்வேன் யானும்.

(நூலாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையை இறைஞ்சுவோம்

இறையை நாமும் இறைஞ்சிடுவோம்
இனிதே அருளக் கேட்டிடுவோம்.
நிறைவாம் கல்வியும் கோரிடுவோம்.
நன்றாம் சுகமும் வேண்டிடுவோம்.

உண்மை நேர்மை நெறியினிலே
உயர்வாய் நடத்தக் கோரிடுவோம்.
கண்ணியம் காத்து வாழ்வதற்கும்
கருணை புரியக் கேட்டிடுவோம்.

மற்றோர் தமக்குத் தீங்கதனை
மறந்தும் செய்யா மனம்கேட்போம்.
பற்றுடன் பேணிப் பெற்றோரைப்
பார்த்திடும் நல்ல உளம் கேட்போம்.

கற்றுத் தந்திடும் ஆசான்கள்
களிப்பே காணும் நிலை கேட்போம்.
பற்றுடன் தாய்த்திரு நாட்டுக்குப்
பாதகம் அணுகா நிலைகேட்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் குறள்

- உலகைப் படைத்து உயர்வாகக் காத்து
  நலம்நல்கும் நாயகனை நாடு.

- பெற்றோரைப் பேணிப் புவியில் நடப்பதனை
  பற்றிடுவாய் நீயும் புரிந்து

- உந்தன் உயர்வுக் குழைத்திடும் உன்னத
  தந்தையை உள்ளம் தரி

- பெற்றோரை பேணிப் பணிந்து நடந்திடல்
  நற்றவத்துள் மேலாம் நவில்.

- நீதி நெறியில் நிலத்தில் நடந்திடில்
  ஆதியருள் கிட்டும் அறி.

- அறிவினை ஊட்டிடும் ஆசிரியர் தம்மை
  நிறைவாய் மதித்து நட.

- நல்லோன் எனும் பெயரை நானிலத்தில் பெற்று
  சொல்செயலில் வாய்மை செலுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் நன்னெறி வெண்பா

இறையோனே நீ இயம்பும் இன்னரும் மார்க்க
நெறியில் சிறார் நாம் நிலைத்தே - இருந்திடுவோம்
நன்றாம் நலத்துடன் நல்லறிவு ஞானமெலாம்
என்றும் தருவாய் எமக்கு.

பெற்றெடுத்த தாயினைப் பேணியே காத்திடுதல்
நற்றவத்துள் மேலாம் நிலையாகும் - பொற்பதியே
என்றான தாயவளை என்றும் சிறுவர்கால்
உன்னதமாய்க் காப்பீர் உணர்ந்து.

சிறிய வயதில் சிறப்புடன் கற்பின்
வருங்கால வாழ்வு வனப்பாய் - இருந்திடும்
என்பதை ஏற்றுணர்ந்து ஏற்றமாய்க் கற்றேதான்
உன்னதம் காண்போம் உயர்ந்து.

உண்மையும் நேர்மையும் உன்னத தன்மையும்
கண்ணியச் செய்கையும் கொண்டநல் - மாண்பின்
சிறுவராய் நீங்கள் சிறந்தோங்கி என்றும்
பெறுவீர் பெரிதாம் புகழ்.

எத்தீங்கும் எவ்வுயிர்க்கும் என்றும் இழைக்காது
உத்தமத் தன்மையில் ஓங்கியே - இத்தரையில்
உன்னதம் மிக்க உயர்வின் சிறார்களாய்
நன்றே திகழ்ந்திடுவோம் நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கும்மிப்பா

சிறுவர் யாவரும் வாருங்கடா – நல்ல
சீரிய பண்பினைப் பற்றுங்கடா
சிறப்புறு கல்வியைத் தேடுங்கடா – நல்ல
சிந்தனை செய்தே திகழுங்கடா.

வாய்மையை வாழ்வில் பேணுங்கடா – நல்ல
வார்த்தையை மட்டுமே பேசுங்கடா
தூய்மை உள்ளமாய்த் துலங்குங்கடா – நல்ல
துணிச்சலும் மிக்கோராய்த் திகழுங்கடா

ஈன்றவர் சொற்படி நடவுங்கடா – நல்ல
இன்னரும் சாதனை புரியுங்கடா
ஆன்றோர் மொழிகளும் அறியுங்கடா – நல்ல
ஆற்றலும் மிகைத்தே வளருங்கடா

நல்லவர் என்றிட நடவுங்கடா – நல்ல
நாட்டுப் பற்றுடன் திகழுங்கடா
பொல்லார் உறவினைத் தவிருங்கடா – நல்ல
பேரினைப் பெரிதாய் அடையுங்கடா.

கண்ணியம் காத்து நடவுங்கடா – நல்ல
கரிசனை கல்வியில் காட்டுங்கடா.
புண்ணியம் என்றே பெற்றோர்க்கு – நல்ல
பணிவிடை என்றும் செய்யுங்கடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் சொர்க்கம் தாய்

உலகில் தாய்க்கு நிகராக
உள்ளவர் எவரும் உண்டாமோ!
நலமே! சேய்க்கு எனவாழும்
நரர்தான் வேறு உளராமோ!

தன்னுயிர் என்றே தம்சேய்யைத்
தரமாய்க் காப்பதும் தாய்தானே!
இன்னல் ஆயிரம் சேய்களுக்காய்
இனிதே ஏற்பதும் தாய்தானே!

மண்ணில் தாய்க்கு நிகராக
மற்றோர் எவரும் இங்கில்லை.
கண்ணின் மணியாய்த் தன்மகவைக்
காத்திடத் தாய்போல் ஆளில்லை.

உலகின் சொர்க்கம் தாய் என்றே
உணர்ந்து நாமும் நடந்திடுவோம்.
நலமாம் அவளின் தியாகத்தை
நன்கே நாமும் போற்றிடுவோம்.

தாயைப் பேணிக் காத்திடுதல்
தரமுயர் பணியாம் புரிந்திடுவோம்.
நேயம் மிகைத்தே நம்தாய்க்கு
நாமும் நன்கு உதவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்

தியாகம் தன்னின் திருவுருவாய்த்
திகழ்வது ஆசான் தொழிலாளர்.
உயரிய இவர்தம் சேவைகளால்
உன்னதம் தன்னில் மிகையாளர்.

எரியும் தீபம் போன்றவர்கள்.
ஏற்றம் தன்னில் உயர்ந்தவர்கள்.
புரிந்தே அவர்பணி போற்றிடுவோம்.
புனிதப் பணியார் என்றிடுவோம்.

ஏற்றிடும் ஏணி அவராகும்.
ஏழ்மை அவரின் சொத்தாகும்.
போற்றுதல் தனுக்கு உரித்தாவார்.
பொறுமையும் பேணி நடந்திடுவார்.

பெற்ற சேயாய் மாணவரைப்
பெரிதும் எண்ணி நடந்திடுவார்
பற்றுடன் கல்வியை அவர்களுக்கு
பாங்காய் நாளும் புகட்டிடுவார்.

தன்னுடை மாணவர் உயர்வினிலே
தினமும் மகிழ்வே கண்டிடுவார்.
தன்னுடை பணிக்குச் சான்றாகத்
தானே! இதனைச் செய்திடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையை மேலாய் மதிப்போம்

தந்தையின் மகிமை உலகினிலே
தரத்தினில் மேலாம் உணர்வோமே
வந்தனம் கோடி சொல்லியே நாம்
வாழ்த்தி என்றும் மகிழ்வோமே.

உணவும் உடையும் தருகின்றார்.
உயரிய கல்வியும் அளிக்கின்றார்.
பணமும் தேவைப் பொருளினையும்
பாங்காய் எமக்குக் கொடுக்கிறார்.

இன்னல் ஏதும் இல்லாமல்
இனிதே எம்மைக் காக்கின்றார்.
என்றும் எங்கள் உயர்வுக்காய்
ஏற்ற தியாகம் செய்கின்றார்.

தினமும் உழைத்தே எங்களது
தேவையை நிவர்த்தி செய்கின்றார்
மனதில் எங்கள் உயர்வைத்தான்
மேலாய் என்றும் கொள்கின்றார்.

இன்னரும் பேறாய்த் தந்தைதனை
இயம்பி நாமும் மகிழ்ந்திடுவோம்.
உன்னதம் தன்னில் உயர்ந்தோரோய்
உணர்ந்தே அவரைப் பேணிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்நாடு

பெற்ற தாய்க்கு நிகராகப்
பிறந்த நாட்டைக் கருதிடுவோம்.
பற்றுடன் அதனின் உயர்வுக்காய்ப்
பணிகள் பலவும் செய்திடுவோம்.

உன்னத நாடாய் உலகினிலே
உயர்ந்திட இலங்கைக் குதவிடுவோம்
என்றும் நாட்டின் உயர்வதனை
ஏற்றம் என்றே எண்ணிடுவோம்.

ஒற்றுமை ஓங்கும் நாடாக
உயர்வாய் இலங்கையை ஆக்கிடுவோம்.
வேற்றுமை யாவும் மாய்ந்தேதான்
விளங்கும் நாடாய்ச் செய்திடுவோம்.

வறுமை இல்லா வளநாடாய்
விளங்கிட நாமும் வழிசெய்வோம்.
சிறுமைச் செயல்கள் இல்லாத
சிறப்பாம் நாடாய் உயர்த்திடுவோம்.

செல்வச் செழிப்பில் எம்நாடும்
சிறந்து ஓங்கிடச் செசய்திடுவோம்.
பொல்லாச் செயல்கள் எல்லாமும்
பொசுங்கிப் போக உதவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதி

நாட்டில் அமைதி ஓங்குதற்கு
நாளும் நன்றாம் பணி செய்வோம்.
வாட்டும் யுத்தக் கொடுமைகளை
விரட்டி அழிக்க வழிசெய்வோம்.

அமைதி அற்ற நாட்டினலே
அவலம் தானே நிறைந்திருக்கும்.
சுமையாய் மக்கள் உளங்களிலே
சோகம் தனே! சூழ்ந்திருக்கும்.

அமைதி உள்ள நட்டினிலே
அதிகம் விருத்தி ஏற்படுமே!
சுமையாய் வாழ்வும் ஆகாமல்
சுந்தர மகிழ்வு துலங்கிடுமே!

ஒற்றுமை நாட்டில் ஓங்கிடிலோ
உன்னத அமைதி நிலவிடுமோ!
வேற்றுமை வீழ்ந்து மாய்ந்திடிலோ!
வளமாம் வாழ்வு தோன்றிடுமே!

அமைதியின் உறைவிடம் என்றேதான்
ஆகி நாடும் உயரட்டுமே!
எமையும் வாட்டும் வேதனைகள்
எல்லாம் அழிந்து போகட்டுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதம் காத்து வாழ்ந்திடுவோம்

அடுத்தோர் சொத்தை அபகரித்தல்
ஆகா தென்றே தவிர்த்திடுவோம்.
வடுவே வாழ்வில் வருவதனால்
வீணாம் இதனை விலக்கிடுவோம்.

கொடுமை பிறர்க்குப் புரிவதையும்
கனவில் கூடத் தவிர்த்திடுவோம்.
அடுக்காச் செயல்கள் அத்தனையும்
அறவே தவிர்த்து நடந்திடுவோம்.

நல்லோர் எல்லாம் நாடிவர
நன்கே நாமும் நடந்திடுவோம்.
பொல்லார் உறவைத் தவிர்த்தே தான்.
புனிதம் காத்து வாழ்ந்திடுவோம்.

பிறர்க்கு என்றும் நன்மைகளைப்
புரிந்தே நாமும் நடந்திடுவோம்.
சிறப்பாம் செயல்கள் அத்தனையும்
சிந்தை உவந்தே செய்திடுவோம்.

உண்மை நேர்மை நீதிநெறி
உயர்வாய்ப் பற்றி நடந்திடுவோம்.
மண்ணில் பிழையாம் காரியத்தை
மனதால் கூடத் தவிர்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயி

சேற்றில் காலைப் புதைக்கின்றான்
சோற்றின் நெல்லைத் தருகின்றான்.
ஆற்றல் அதிகம் கொண்டுள்ளான்.
அவன்தான் நாட்டின் விவசாயி.

நாட்டு மக்கள் உணவுக்காய்
நன்றாம் சேவை செய்கின்றான்.
வாட்டும் வறுமையை விரட்டுதற்காய்
வியர்வை சிந்தி உழைக்கின்றான்.

வயலின் பசுமைச் செழுமையிலே
வசந்தம் அதிகம் காண்கின்றான்.
உயரிய விளைவைக் காண்பதற்காய்
உடம்பை வருத்தி உழைக்கின்றான்.

பொன்னின் நிறத்து நெல்மணியைப்
பார்த்துப் பார்த்தே மகிழ்கின்றான்.
என்றும் வயலின் செய்கையிலே
எழிலாம் வசந்தம் காண்கின்றான்.

மண்ணின் மைந்தன் என்றவனும்
மாண்பின் நாமம் பெறுகின்றான்.
புண்ணியம் என்றே புவிதனுக்குப்
பெரிதும் உதவி புரிகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் நன்னெறிப் பாடல்

சிறுவர் ஆன நாங்கள்
செயல்களில் புனிதம் காப்போம்.
சிறப்புறு செல்வம் என்று
சொல்லிடும் கல்வி தன்னில்
பெருமொரு உயர்வு கண்டு
பெற்றவர் மகிழச் செய்வோம்.
நிறைவுறு பண்பு நெறியை
நன்றெனப் பற்றி நடப்போம்.

உண்மை நேர்மை தன்னை
உயிராய்ப் போற்றி நிற்போம்.
புண்ணிய செயல்கள் யாவும்
புரிவதில் மகிழ்வு காண்போம்.
கண்ணிய நடத்தை தன்னில்
கீர்த்தியே நாமும் காண்பேம்.
மண்ணினில் எங்கள் செய்கை
மகிமையாய்த் திகழும் அன்றோ!

பெற்றவர் வார்த்தை தன்னைப்
பெரிதுமே பேணி நிற்போம்.
மற்றவர்க் கென்றும் நாங்கள்
மறந்துமே தீங்கு செய்யோம்.
கற்றுமே தந்து நிற்கும்
கண்ணிய ஆசான் தம்மில்
பற்றுதல் மிகையாய்க் கொள்வோம்.
பாங்காய் மதித்தும் நடப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவை நன்கு பேணிடுவோம்.

நாவை நன்கு பேணிடுவோர்
நன்றாம் இன்பம் கண்டிடுவர்.
நாவைப் பேணா திருந்திடுவோர்.
நாளும் இன்னல் அடைந்திடுவர்.

நன்கே சிந்தனை செய்தேதான்
நாவால் வார்த்தையை உரைத்திடுவோம்.
இன்னலை இதனால் தவித்திடுவோம்.
இன்பம் வாழ்வில் பெற்றிடுவோம்.

நாவைப் பேணாக் காரணமாய்
நாசம் உற்றோர் ஏராளம்
ஆவல் கொண்டு நாகாத்தோர்
அடைந்த வெற்றியும் ஏராளம்.

அறிவில் ஓங்கிய ஞானியர்கள்
அதிகம் நாவைக் காத்திடுவர்.
முறையாய் அதனைக் காப்பதனால்
மேன்மை அதிகம் பெற்றிடுவர்.

சிறுவர் நாமும் எம்நாவைச்
சிறப்பாம் முறையில் பேணிடுவோம்.
பெரிதாம் உயர்வு இதனாலே
பெற்றே வாழ்வில் உயர்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்கள் மீது இரக்கம் காட்டுவோம்.

உயிர்கள் மீது இரக்கத்தை
உயர்வாய் என்றும் காட்டிடுவோம்.
தயவை அதற்குக் காட்டிடுதல்
தரணியில் கடனாய்க் கருதிடுவோம்.

எறும்பைக் கூட கொல்கின்ற
எண்ணம் தனையும் தவிர்த்திடுவோம்.
கருமை நிறத்துக் காகத்தையும்
கருணை யுடனே நோக்கிடுவோம்.

ஆடு மாடு நாய்பூனை
ஆன மிருகம் அனைத்துக்கும்
கூடிய கருணை காட்டிடுவோம்.
களிப்பே இதனால் கண்டிடுவோம்.

உயிர்கள் மீது அன்புறுதல்
உயரிய பண்பாம் உணர்ந்திடுவோம்.
கயவர் தானே பிராணிகட்குக்
கொடுமை புரிவோர் என்றிடுவோம்.

வனத்தின் பறவை விலங்குகளை
வளர்ப்பதும் கூண்டில் தவிர்த்திடுவோம்
கனத்த இரக்கம் உயிரினத்தில்
காலம் பூராய்க் காட்டிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயற்சி செய்வோம்

முயற்சி செய்யும் காரியத்தின்
முடிவோ வெற்றி ஆகிடுமே!
உயர்ச்சி தன்னை நிச்சயமாய்
உரித்தாய் அதுவும் தந்திடுமே.

முயலா முடங்கி இருந்திடிலோ
முற்றும் தோல்வி ஆகிடுமே!
தயவைப் பிறரிடம் கோருகிற
தன்மையும் எம்மில் தோன்றிடுமே!

முயற்சி செய்யும் மாந்தர்கள்
முடிவில் வெற்றி கண்டிடுவர்
அயர்ச்சி கொண்டோர் தம்வாழ்வில்
அவல நிலையை அடைந்திடுவர்.

முயலா திருக்கும் மனிதர்களை
மண்ணும் சாபம் என்றிடுமே!
துயரம் அன்றோ முயலார்க்குத்
துணையென வாழ்வில் தொடர்ந்திடுமே!

மனித வாழ்வின் மேன்மைக்கு
முயற்சி என்றும் உதவிடுமே!
இனிதே நாமும் முயன்றேதான்
இன்பம் வாழ்வில் கண்போமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள் அதிகம் வாசிப்போம்

நிறைய நூல்கள் வாசித்து
நன்கே அறிவை அடைந்திடுவோம்.
குறையே இல்லா மேதையெனக்
குவலய மீதில் உயர்ந்திடுவோம்.

உலக ஞானம் எல்லாமும்
உள்ளது நூல்களில் புரிந்திடுவோம்.
நலமே நாமும் அறிந்ததனால்
நிறைய நூல்கள் கற்றிடுவோம்.

பூரண மனிதனாய் ஆவதற்கு
புரிந்தே நூல்கள் வாசிப்போம்.
சீரிய முறையில் வாசித்துச்
சிறப்பாம் அறிஞராய் ஆகிடுவோம்.

நூல்கள் படிப்போர் உலகத்தில்
நன்றாம் உயர்வைக் கண்டிடுவர்.
ஆல்போல் அறிவில் உயர்ந்தேதான்
அதிகம் மகிமை பெற்றிடுவர்.

நூலகம் ஒன்றை வீட்டினிலே
நன்கே நாமும் அமைத்திடுவோம்.
காலம் பூராய் வாசித்துக்
கூடிய அறிவை அடைந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுமை காப்போம்

பொறுமை உலகில் இல்லையெனில்
புவியும் பொசுங்கி அழிந்திடுமே!
சிறப்பாம் பொறுமை காத்தேதான்
சிந்தை மகிழ்வு கொள்வோமே!

பொறுமை மனிதர் வாழ்வினிலே
புனித நிலையைத் தந்திடுமே!
பொறுமை இல்லாச் சமூகத்தில்
பெரிதும் இன்னல் நிலைத்திடுமே!

பொறுமை காத்து வாழ்ந்தேதான்
பெரிதும் வெற்றி காண்போமே.
சிறுமை நிலையைத் தவிர்த்தேதான்
சீவியம் முழுக்க உயர்வோமே!

பொறுமையின் முடிவு வெற்றியெனப்
பெரிதாம் உண்மை புரிவோமே!
நிறைவாய்ப் பொறுமை காத்தேதான்
நிலத்தினில் நன்கு உயர்வோமே!

பொறுமை இல்லா மனிதர்களை
பெரிதும் இன்னல் வாட்டிடுமே!
சிறுமைச் செயல்கள் செய்வோரின்
சீவியம் தாழ்வை அடைந்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சம் கொள்ளல் ஆகாது

பேயே! என்று சொன்னாலும்
பயமே! அடைதல் தவிர்த்திடுவாய்!
ஆய்ந்தே நீயும் பார்த்திடுவாய்
அதுவோ இல்லை புரிந்திடுவாய்!

பேய்என ஒன்று உலகினிலே
பொய்யே யாகும் அறிந்திடுவாய்!
தூய்மை வீரம் காத்திடுவாய்!
துணிவாய் உலகில் வாழ்ந்திடுவாய்!

அச்சம் கொள்ளல் அவனியிலே
ஆகாச் செயலாம் தவிர்த்திடுவாய்.
உச்ச வீரம் கொண்டவனாய்
உலகில் என்றும் வாழ்ந்திடுவாய்.

வீரம் மிக்க சிறுவன் என
வாழ்வில் உயர்வு கண்டிடுவாய்.
பாரில் எதற்கும் அஞ்சாமல்
பக்குவ மாக நடந்திடுவாய்.

எதற்கும் அஞ்சா நிலையினிலே
என்றும் திடமாய் இருந்திடுவாய்.
இதயம் தன்னை வீரத்தால்
இனிதே என்றும் நிறைத்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத் தூய்மை

உள்ளம் தன்னில் தூய்மைதனை
உயர்வாய் நாமும் பற்றிடுவோம்.
கள்ளத் தனங்கள் இல்லாமல்
கண்ணிய மாக நடந்திடுவோம்.

உள்ளத் தூய்மை கொண்டே தான்
உன்னதம் வாழ்வில் பெற்றிடுவோம்.
துள்ளித் திரியும் சிறார் நாங்கள்
தூய்மை உளமாய்த் திகழ்ந்திடுவோம்.

தூய்மை உளமாய்த் திகழ்ந்தேதான்
தூய செயல்கள் செய்திடுவோம்.
ஆய்ந்தே அறிந்து தூய்மைநெறி
அழகே நாமும் நடந்திடுவோம்.

உள்ளத் தூய்மை உள்ளோராய்
உலகில் என்றும் நடந்திடுவோம்.
கள்ளத் தனங்கள் தவிர்த்தே தான்
காசினி உயர்வு கண்டிடுவோம்.

தூய்மை உள்ளம் கொண்டோராய்த்
துலங்கி உலகில் உயர்ந்திடுவோம்.
பாய்ந்திடும் நதிபோல் பிறருக்குப்
பாங்காய் உதவிகள் புரிந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுத்தம் பேணி நடப்போம்

சுத்தம் பேணல் மனிதனுக்குச்
சுகமாம் வாழ்வை வழங்கிடுமே!
நித்தம் சுத்தம் காத்தேதான்
நலமாம் வாழ்வைப் பெறுவோமே!

சுத்தம் பேணி நடப்பதுவும்
சிறுவர் எமக்குக் கடனாகும்
புத்தம் புதிய எழுச்சியெல்லாம்
புலரும் அதனால் எமக்காகும்.

வாட்டும் கொடிய நோய்களினை
விரட்டிடும் சுத்தம் புரிவோமே!
நீடிய வாழ்வும் நன்கேதான்
நிலத்தினில் ஆகிடும் அறிவோமே!

நோய்கள் இல்லா வாழ்வேதான்
நிலத்தில் செல்வம் என்போமே!
ஆய்ந்தே நாமும் சுத்தமதை
அதிகம் வாழ்வில் காப்போமே!

சுத்தம் இல்லா வாழ்வதுவோ
சாவை விரைவாய்த் தந்திடுமே!
இத்தரை மீதில் சுத்தமுடன்
இருந்திடில் வாழ்வும் நீண்டிடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோபம் தவிர்ப்போம்

கோபம் கொள்ளல் கூடாதே!
கூடிய அளவில் இதைத் தவிர்ப்போம்
ஆபத் ததிகம் கோபத்தால்
ஆகும் அதனால் அதைத்தவிர்ப்போம்.

ஆத்திரம் வந்திடும் வேளையிலும்
அதனை அடக்கி இருந்திடுவோம்.
பூத்திடும் இதனால் உயர்வேதான்
புரிந்தே நாமும் நடந்திடுவோம்.

எந்த இடரின் வேளையிலும்
ஏற்றம் கோபம் தவிர்ப்பதுதான்
இந்த உண்மை புரிந்திடிலோ!
இன்பம் வாழ்வில் எமக்கேதான்.

உலகில் அமைதி மாய்வதற்கு
உரிய காரணம் கோபம்தான்.
நலமே விளையப் புவியினிலே
நல்வழி கோபம் தவிர்ப்பதுதான்.

கோபம் தானே கொடுமைக்குக்
கூடிய காரணம் புரிந்திடுவோம்.
சாபம் ஆன இதனை நாம்
சீவியம் தன்னில் தவிர்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத் தோட்டம்

வீட்டுத் தோட்டம் செய்திடுவோம்.
விளைச்சல் அதிகம் பெற்றிடுவோம்.
நாட்டின் உயர்ச்சிக் கிதனைநாம்.
நன்றாம் பணியாய்க் கருதிடுவோம்.

கத்தரி வெண்டி கொச்சியெனக்
கனமாய்ப் பயிர்கள் நட்டிடுவோம்.
எத்தினப் பொழுதும் வீட்டுக்கு
ஏற்ற மரக்கறி பெற்றிடுவோம்.

வீட்டுத் தோட்டம் இதனாலே
விரும்பிய மரக்கறி பெற்றிடுவோம்
வீட்டில் கறிகளின் செலவினையும்
வகையாய் நாளும் குறைத்திடுவோம்.

நஞ்சே இல்லா மரக்கறிகள்
நன்கே நாமும் பெற்றிடுவோம்.
விஞ்சிட வீட்டில் வருமானம்
வீட்டுத்தோட்டம் செய்திடுவோம்.

வீட்டுத்தோட்டம் மூலம் நாம்
விளைச்சலும் அதிகம் பெற்றிடுவோம்.
நாட்டின் உணவுத் தேவைகட்கு
நாமும் நன்கே உதவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப் பொருள் பாவனை தவிர்ப்போம்

போதைப் பொருளின் பாவனையோ
பொல்லாத் தீங்கில் பெரிதாகும்.
ஆதலால் அதனைத் தவிர்த்திடுதல்
அனைவர் மீதும் கடனாகும்.

போதைப் பொருளைப் பாவிப்போர்
புவியில் வாழ்தல் வீணாகும்.
சாதல் அவர்க்கு நலமாகும்.
சத்தியம் தானே! இதுவாகும்.

போதைப்பொருளின் பாவனையோ!
புத்தி இல்லார் செயலாகும்.
ஈதைத் தவிர்த்து வாழ்ந்திடுதல்
இன்னரும் மாந்தர் பண்பாகும்.

மதுவின் பர்வணை கொண்டோர்க்கு
மதியும் குன்றிப் போய்விடுமே!
எதுவும் புரியா நிலைவருமே!
ஏற்றம் யாவும் அழிந்திமே!

மதுவைப் பருகும் மாந்தரினை
மடயர் என்றே மதித்திடுவோம்.
பொதுவில் இவர்கள் புவிதனுக்குப்
பெரிதோர் சாபம் என்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைத்தல் தவிர்ப்போம்

புகையே பிடிக்கும் மாந்தரினைப்
பெரிதாம் இன்னல் சூழ்ந்திடுமே!
இகத்தில் இவர்தம் வாழ்வினிலே
இன்பம் குன்றிப் போய்விடுமே!

உடலின் நலமும் புகைத்தலினால்
ஒவ்வோர் நாளும் தளர்ந்திடுமே!
விடமே உயிர்க்கு என்றதுவும்
விரைவாய் ஓர்நாள் ஆகிடுமே!

புகையே பிடிக்கும் மனிதர்க்குப்
புற்று நோயும் வந்திடுமே!
நிகரில்ச் செல்வம் உடல்நலமும்
நாச நிலையை அடைந்திடுமே!

புகைத்தல் தவிர்த்து நடந்திடுதல்
புனிதச் செயலே என்றிடுவோம்.
இகழும் செயலாய்ப் புகைத்தலினை
இங்கே நாமும் கருதிடுவோம்.

புவியில் புகைக்கும் செயல்தன்னை
பொல்லாச் செயலாய்க் கருதிடுவோம்.
தவிர்த்தே இதனை நடந்திடுதல்
தர்மச் செயலே என்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடழித்தல் தடுப்போம்

காட்டை அழிக்கும் காரியத்தை
கடுமை யாகத் தடுத்திடுவோம்.
நாட்டின் உயிர்ப்பு காடென்றே
நன்றாம் உண்மை உணர்ந்திடுவோம்.

காடு அழியும் போதினிலே
குறைந்த மழைதான் கிட்டிடுமே!
நாடும் செழுமை இழந்தேதான்.
நாச நிலைமைக் காகிடுமே!

மரங்கள் வளர்க்கும் செயல்தன்னை
மண்ணில் புனிதப் பணிஎன்போம்.
வரங்கள் என்றே மரங்களினை
வளமாய்க் காத்தல் கடன் என்போம்.

பறவை கானக விலங்கெல்லாம்
பாங்காய் வாழ வழிசெய்வோம்.
சிறப்பாய்க் காட்டைக் காத்தேதான்
செழுமையை நாட்டுக் களித்திடுவோம்.

கனிகளும் தேனும் கானகத்தில்
கனமாய்க் கிடைக்கச் செய்திடுவோம்.
இனிதே நாமும் நாட்டினிலே
இருக்கும் காட்டைக் காத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு நோய் பரவாது தடுப்போம்

நாட்டில் டெங்கு நோயாலே
நாசம் அதிகம் விளைகிறதே!
வாட்டும் இந்த நோய் தன்னால்
வருத்தம் மிகையய் ஆகிறதே!

தேங்கித் தண்ணீர் நிற்பதுவே
தளமாய் டெங்குக் அமைகிறது.
தீங்கின் நுளம்புப் பெருக்கிடமாய்
தரையில் இதுதான் இருக்கிறது.

சிரட்டை சிப்பி போத்தல்களைச்
சிறப்பாம் முறையில் அகற்றிடுவோம்.
தரையில் நீரும் தேங்காமல்
தக்க முறையாய்க் காத்திடுவோம்.

நுளம்பும் பெருகா நிலைபேணி
நேயாம் டெங்கைத் தடுத்திடுவோம்.
தளத்தில் உடல் நலம் ஒன்றேதான்
தரமுயர் செல்வம் என்றிடுவோம்.

அரசும் டெங்கு நோய்தன்னை
அழித்திட நன்கு முயல்கிறதே!
சிரத்தை கொண்டு நாங்களுமே
சிறப்பாய் அதற்கு உதவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒழுக்கம் பேணுவோம்

ஒழுக்கம் இல்லா மனிதர்களை
உலகம் என்றும் தூற்றிடுமே!
அழுக்காய் அவரைக் கருதிடுமே!
அதிகம் வெறுத்து ஒதுக்கிடுமே!

உயிரினும் மேலாய் ஒழுக்கத்தை
உன்னத மாந்தர் கருதிடுவார்.
கயமைத் தனங்கள் இன்றியவர்
கண்ணியம் காத்து வாழ்ந்திடுவார்.

உன்னத தன்மை அனைத்தினிலும்
ஒழுக்கம் உயரிய தென்றிடுவாம்.
நன்றாய் நாமும் ஒழுக்கமுடன்
நாட்டில் நாளும் வாழ்ந்தடுவோம்.

ஒழுக்கம் இல்லா சிறுவர்களை
உலகும் அநாதை என்றிடுமே!
பழக்கம் தன்னில் பண்புநெறி
பற்றி நடக்க பணித்திடுமே.

ஒழுக்கம் உள்ள பிள்ளைகளாய்
உலகில் என்றும் நடந்திடுவோம்.
வழக்க மாக ஒழுக்கத்தை
வாழ்வில் நன்கே பற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

கல்வி தன்னைக் கற்றிடுவோம்
கனத்த அறிவைப் பெற்றிடுவோம்.
செல்வம் கல்வியே என்றிடுவாம்.
சிறப்பாய் வாழ்வில் உயர்ந்திடுவோம்.

கல்வி இல்லா மனிதர்களைக்
கண்ணே இல்லார் என்றிடுவோம்.
எல்லா இடத்தும் கற்றார்க்கு
ஏற்றம் என்றே சொல்லிடுவோம்.

அள்ளிக் கொடுத்த போதினிலும்
அளவில் கல்வி குறையாதே!
கள்வர் திருடவும் முடியாதே
காற்றால் நீரால் அழியாதே.

கல்வி கற்றல் கடன் என்றே
கருதி நாமும் கற்றிடுவோம்.
செல்வம் தன்னில் உயரியதாம்
சீரிய கல்வியைப் பெற்றிடுவோம்.

கல்வியில் நாமும் உயர்ந்தேதான்
கண்ணியம் அதிகம் பெற்றிடுவோம்.
எல்லை இல்லாச் செல்வமென
எண்ணி அதனைத் தேடிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோபம் கொள்ளல் ஆகாது

கோபம் கொள்ளல் ஆகாது
கூடிய அழிவைத் தந்திடுமே!
ஆபத் ததிகம் அதனலே
ஆகிடும் என்றும் புரிவோமே!

கோபம் கொள்ளும் மனிதர்களே!
கேவல நிலையை அடைந்திடுவார்
கோபம் அடக்கி வாழ்பவர்கள்
கண்ணியம் பெற்றுத் திகழ்ந்திடுவார்.

பொறுமை காத்து வாழ்வதனால்
பெரிதும் வெற்றி கண்டிடலாம்.
சிறுமைத் தனமே கோபம்எனச்
சிந்தித் துணரின் புரிந்திடலாம்.

கோபம் வந்திடும் வேளையிலே
கூடிய பொறுமை காத்திடுவோம்.
பாவம் என்றே கோபத்தைப்
பெரிதும் தவிர்த்து வாழ்ந்திடுவோம்.

கோபம் வாழ்வின் மகிழ்ச்சிக்குக்
கூடிய எதிரி என்றிடுவோம்.
பூபதி வாழ்வின் வெற்றியெலாம்
பொறுமையில் உள்ளது என்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்கரைக் காட்சி

நேரம் கிடைக்கும் போதினிலே
நாமும் கடற்கரை சென்றிடுவோம்.
தூரச் செல்லும் கப்பலையும்
துலக்க மாகப் பார்த்திடுவோம்.

பருந்தும் அங்கே மீன்களினைப்
பிடித்துச் செல்வதும் கண்டிடுவோம்.
சிறிய தோணிகள் கடலலையில்
சிக்கித் தவிர்ப்பதும் பார்த்திடுவோம்.

கரைதனில் தாழை மரங்களையும்
கனமாய்த் தழைத்த புங்கையையும்
நிறையப் படர்ந்துள்ள அடம்பனையும்
நன்கே பார்த்து ரசித்திடுவோம்.

மறையும் சூரியக் காட்சிதனை
மாலைப் பொழுதில் பார்த்திடுவோம்.
நிறைய மகிழ்வை அதனாலே
நாமும் நன்கே அடைந்திடுவோம்.

பெருந்தொகை மீன்களை மீனவர்கள்
பிடித்து வருவதும் பார்த்திடுவோம்.
கரையைத் தொட்டுச் செல்கின்ற
கடலின் அலையும் கண்டிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லார் நட்பு

நல்லார் நட்பை நாடிடுவோம்.
நானில மீதில் உயர்வுறுவோம்.
பொல்லார் உறவைத் தவிர்த்திடுவோம்.
பெரிதாம் தீங்காய்க் கருதிடுவோம்

நல்லார் உறவால் எங்களுக்கு
நலமே நாளும் கிட்டிடுமே!
பொல்லார் உறவால் எப்போதும்
பெரிதாம் தீங்கு நேர்ந்திடுமே!

நல்லார் நட்பைப் பேறாக
நாமும் கருதி நடந்திடுவோம்
பொல்லார் உறவைப் பெருந்தீங்காய்ப்
பகன்றே நாளும் திகழ்ந்திடுவோம்.

பூவுடன் சேர்ந்த நாரதுவும்
பெற்றிடும் வாசம் புரிந்திடுவோம்.
ஆவல் உடனே நல்லோரை
அண்டி நாமும் உயர்ந்திடுவோம்.

தீயார் நட்பு எங்களுக்கத்
தீதாய் என்றும் ஆகிடுமே!
தூய நல்லார் நட்பதுவோ!
தூயவர் என்றெமை ஆக்கிடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் குலாமே!

கவிஞர் குலாமே! சிறாரெமக்குக்
காத்திரக் கவிதைகள் தாருங்கள்.
புவியினில் புனிதர் என்றே நாம்
புகழுறப் பாக்கள் படையுங்கள்.

எங்கள் உளத்தில் நல்லபெரும்
எண்ணம் வளர்ந்திடச் செய்யுங்கள்.
தங்கத் தரமாம் பாக்களினைத்
தந்தே உதவி புரியுங்கள்.

சிறியார் எங்கள் உளத்தினிலே
சீரிய சிந்தையைத் தூண்டுங்கள்.
பெருமை நாமுறப் பாக்களினைப்
படைத்தே எமக்கு உதவுங்கள்.

சிறுவர் இலக்கியப் பாவலரே!
சிறப்பாம் கவிகள் தாருங்கள்.
நெறிவழி நாமும் நடந்தேதான்
நாளை உயர்ந்திட உதவுங்கள்.

உண்மை நேர்மை நீதிநெறி
உரைத்திடும் கவிகள் படையுங்கள்.
கண்ணிய நெறியில் நாம் நிலைக்கக்
கால்கோள் கவிதைகள் தாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்புகள் தீண்டும் மறவாதே

பற்றைக் காட்டினுள் செல்லாதே!
பாம்புகள் தீண்டும் மறவாதே!
தற்காப் பதனில் தவறாதே!
தவறாம் இடத்தினில் நடவாதே!

பாம்பின் பற்களில் விடமுண்டு.
பாதகம் தானே! அதிலுண்டு.
ஆம் அதன் இடத்தினில் செல்லாதே!
அபாயம் ஏற்படும் மறவாதே!

இரவின் இருளில் பாம்புகளும்
இரையைத் தேடி வெளிவருமே!
இருளினில் நாமும் நடப்பதனை
இயன்ற மட்டும் தவிர்ப்போமே.

பல்வகை இனத்துப் பாம்புண்டு
பாதகம் தானே அதிலுண்டு.
எல்லாப் பாம்பிலும் விடமுண்டு.
எண்ணி நடந்திடில் எளிலுண்டு.

பாம்பு என்றால் படைகளுமே
பயந்து போகும் என்றிடுவோம்.
நாம் அதன் தீங்குக் கஞ்சிடுவோம்.
நம்மை நாமே காத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈகைப் பண்பு

பிறருக் குதவும் காரியத்தில்
பிரியம் அதிகம் கொண்டிடுவோம்.
சிறப்பாம் செயலாய் ஈகைதனை
சிந்தை எல்லாம் நிறைத்திடுவோம்.

இறைவன் பண்பில் ஒன்றேதான்
ஈகைத் தன்மை அறிவோமே!
முறையாய் நாமும் ஈகையினை
முடிந்த அளவு செய்வோமே!

பிறருக் கீயாத் தன்மையினைப்
பாவச் செயலாய்ப் புரிவோமே!
தரையில் ஈயும் தன்மைதனை
தரத்தில் உயர்வாய் மதிப்போமே!

எம்மால் இயன்ற அளவிற்கு
ஏழை எளியார்க் குதவிடுவோம்.
அம்மோ! உலகில் ஈகைதனை
அகமே உவந்து செய்திடுவோம்.

ஈகைக் குணத்தைக் குறித்தேதான்
இட்டார் பெரியார் என்றிடுவோம்.
ஆகை யாலே ஈகைதனை
அதிகம் அதிகம் செய்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழை

மழையின் வருகை மண்ணுக்கு
மலர்ச்சி என்றே ஆகிறது
தழைத்துப் பயிர்கள் சிறப்பதற்கு
தக்க துணையாய் அமைகிறது.

வறட்சி என்ற வார்த்தைதனை
விரட்டிட மழையும் விளைகிறது.
சிறப்பாம் மழையும் மண்ணுக்கென
செப்பி உலகும் மகிழ்கிறது.

மழையும் இன்றேல் மண்ணுலகு
மகிமை யற்றுப் போய்விடுமே!
தழைக்கா நிலைக்குப் பயிராகித்
தரிசு நிலமாய் ஆகிடுமே!

சிறப்பாய் மரங்களைக் காத்தேதான்
சீராய் மழையைப் பெற்றிடுவோம்.
வறட்சி அணுகா நிலை தன்னால்
வளமாய் மண்ணைப் பேணிடுவோம்.

மண்ணின் செல்வம் மழையென்றே
மொழிந்தால் மிகையும் ஆகாதே!
புண்ணியம் அன்றோ மழையதுவும்
புவிக்கெனில் பிழையும் ஆகாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுள்ள மிருகம்

நாய்தான் உலகில் நன்றியுள்ள
நல்ல மிருகம் என்போமே!
ஆய்ந்தே உலகும் இதனைத்தான்
அழகாய்ச் சொல்வதும் உணர்வோமே!

நன்றி மிக்க தன்மைதனை
நன்கே மனிதர்க் குணர்த்திடுமே!
அன்றோ மனிதரும் நன்றியுடன்
அழகே வாழத் தூண்டிடுமே!

வீட்டுக் காவல் மிருகமென
விளங்கும் சிறப்பும் நாய்க்குண்டு.
தோட்டக் காவல் செய்கின்ற
தரமாம் தன்மையும் இதற்குண்டு.

ஆடு மாடால் தோட்டங்கள்
அழியா நிலையில் காத்திடுமே!
கூடவே முயலும் தோட்டத்தைக்
கெடுக்கா நிலையில் காத்திடுமே!

வேட்டை யாடும் மனிதர்க்கும்
வளர்க்கும் நாய்கள் உதவிடுமே!
காட்டில் சிறிய மிருகங்களைக்
கலைத்துப் பிடித்துக் கொடுத்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னெறி பற்றி நடப்போம்

நன்னெறி பற்றி நடந்திடுவோம்.
நல்லோன் என்றே பேர்பெறுவோம்.
உன்னத செயல்கள் அத்தனையும்
உயர்வாய்ச் செய்தே மகிழ்ந்திடுவோம்.

பெற்றோர் பெரியோர் ஆசான்களை
பெரிதும் மதித்து நடந்திடுவோம்.
கற்றலில் என்றும் கரிசனையைக்
காத்திரமாகக் காட்டிடுவோம்.

சாதி பேதம் பார்க்காமல்
சகோதர உணர்வில் பழகிடுவோம்.
நீதி நெறிகள் தவறாமல்
நன்கே நாமும் நடந்திடுவோம்.

உள்ளம் தன்னைத் தூய்மைகளால்
உயர்வாய் என்றும் நிறைத்திடுவோம்.
கள்ளத் தனங்கள் கிஞ்சித்தும்
கொள்ளா நிலையில் நடந்திடுவோம்.

வாய்மை தன்னை வாழ்வினிலே
வளமாய் என்றும் பற்றிடுவோம்.
தூய்மை யாக உடல்உடைகள்
துலங்க என்றும் வாழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிவைப் பற்றி நடந்திடுவோம்

பணிவு என்பது மனிதர்க்குப்
பெருமையை நல்கும் புரிந்திடுவோம்.
உணர்ந்தே நாமும் பணிவதனை
உயர்வாய் பற்றி நடந்திடுவோம்.

அடக்கம் என்ற அரும்பண்பை
அடைந்திடில் வாழ்வில் உயர்வுண்டு
அடங்கா நிலையின் அகங்காரம்
அணியாய்க் கொண்டோர்க் அழிவுண்டு.

அடக்கம் உள்ள சிறுவர்என
அழகாம் பேரைப் பெற்றிடுவோம்.
திடமாய் வாழ்வில் உயர்வதனைத்
தானே! இதனால் அடைந்திடுவோம்.

உயரிய பண்பில் பணிவே தான்
உன்னதம் என்று உணர்ந்திடுவோம்.
துயரே அணுகா வாழ்விற்குத்
துணிந்ததைப் பற்றி நடந்திடுவோம்.

பணிவு இன்றி அகந்தையுடன்
பாரில் நடப்போர் தாழ்வுறுவர்.
அணியென அதனைப் பற்றிடுவோர்.
அரும்பெரும் வெற்றி கண்டிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதையும் ஏற்கும் உள்ளம்

இன்னல் வந்திடும் போதினலே
இதயத் துறுதி கொண்டிடுவாய்.
நன்மைக் கென்றே எல்லாமும்
நடக்குற தென்றே எண்ணிடுவாய்.

இன்பம் துன்பம் எல்லாமும்
இரண்டறக் கலந்ததே வாழ்வென்பாய்.
இன்னலும் இன்பம் எனஏற்கும்.
இதயம் தன்னைக் கொண்டிடுவாய்.

எதையும் தாங்கும் உள்ளத்தை
ஏற்றம் என்றே கருதிடுவாய்.
நிதமும் இதனால் நீயும்நல்
நீடிய இன்பம் கண்டிடுவாய்.

துன்பம் வந்திடும் போதினிலே
துயரில் நீயும் மூழ்காதே!
இன்பமும் விரைவாய் உனைநாடி
இனிதே வந்திடும் மறவாதே!

இன்பம் ஒன்றே வாழ்வென்று
இதயத் துறுதி கொள்ளாதே!
இன்னல் உன்னைத் தொடர்வதையும்
இங்கே நீயும் மறவாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியோரை மதிப்போம்

வயதில் முதிர்ந்த பெரியோரை
வாழ்வில் என்றும் மதித்திடுவோம்.
உயர்வே என்று அவர்களது
உரைகளை ஏற்று நடந்திடுவோம்.

உலக அனுபவம் அவர்களுக்கு
உயர்வாய் உள்ளதும் புரிந்திடுவோம்.
நலமே முதியோர் உறவதனை
நன்கே நாமும் காத்திடுவோம்.

பெற்றோர் தம்மை மதிப்பதுபோல்
பெரியோர் தமையும் மதித்திடுவாம்
நற்றவம் என்றே பெரியோரை
நானில் மீதில் கருதிடுவோம்.

பெரியோர் ஆசீர் வாதத்தைப்
பெரிதாய் நாமும் பெற்றிடுவோம்.
சிறப்பாம் உயர்வை அதனாலே
செகத்தில் நாமும் பெற்றிடுவோம்.

பெரியோர் தம்மை மதிப்பதிலே
பெரிதும் மகிழ்வு கண்டிடுவோம்.
அரிதாம் அவர்கள் கருத்ததனை
அனுபவச் சான்றாய் ஏற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர தினம்

அந்நியர் ஆட்சிப் பிடியினிலே
அன்று நாடும் இருந்ததுவே!
வந்த விடுதலை காரணமாய்
வசந்தம் எமக்குக் கிடைத்ததுவே!

இலங்கை நாட்டின் விடுதலையை
இனிதே எண்ணி மகிழ் வோமே
நலங்கள் நாடும் பெறுவதற்கு
நாமும் நன்கு உழைப்போமே

சுதந்திர தினத்தை நினைத்தேதான்
சுகந்தம் நாமும் காண்பாம்.
அதனைத் தந்த வீரர்களை
அகத்தில் என்றும் நிறைப்போமே.

நாட்டுக் காகத் தியாகங்கள்
நன்கே நாமும் செய்வோமே!
வாட்டும் இடரும் அணுகாமல்
வளமாய் நாட்டைக் காப்போமே!

வாழ்வும் வளமும் நாடென்றே
வாழ்ந்து புகழும் பெறுவோமே!
ஆழ்ந்த நாட்டுப் பற்றுடனே
அழகே நாமும் திகழ்வோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் சிங்கள புத்தாண்டு

சிங்களத் தமிழர் புத்தாண்டு
சிறப்பென நாட்டுக் கமையட்டும்.
எங்கள் நாட்டின் ஏற்றமென
எழிலே பெற்றது திகழட்டும்.

இலங்கை நாட்டில் இத்திருநாள்
இனங்களின் உயர்வாய் உயரட்டும்
நலத்தை நாட்டின் மக்களுக்கு
நாளும் நன்கே நல்கட்டும்.

புலரும் இந்தப் புத்தாண்டில்
புத்தெழில் இங்கே பெருகட்டும்.
மலரும் மகிழ்வின் தினமாக
மண்ணில் மாண்பிது காணட்டும்.

இனங்களுக் கிடையே இத்திருநாள்
இணைப்புப் பாலம் ஆகட்டும்.
சனமெலாம் மகிழ்வில் சங்கமிக்கச்
சிறந்த நெறியைக் காட்டட்டும்.

துன்பம் துயரம் எல்லாமும்
தூர விலகிச் செல்லட்டும்.
உன்னதம் தன்னை இத்திருநாள்
உரித்தாய் நாட்டுக் களிக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் தீர்ப்புக் கஞ்சிடுவோம்

இறைவன் தீர்ப்புக் கஞ்சிடுவோம்.
இன்னல் செய்யா திருந்திடுவோம்.
கறையே கொண்ட செயல்யாவும்
கலைந்தே வாழ்வில் நடந்திடுவோம்.

இனிதாம் நல்ல செயல்களினை
இச்சை கொண்டே செய்திடுவோம்.
அனைத்தும் இறைவன் பார்ப்பதனால்
அவனுக் கஞ்சி நடந்திடுவோம்.

கொடுமை நிலைக்க மாட்டாதெனும்
குவலயத் துண்மை புரிந்திடுவோம்.
அடுத்தோர் உயர்வுக் கென்றும் நாம்
ஆன உதவிகள் செய்திடுவோம்.

உண்மை என்றும் அழியாது
உயர்ந்து ஓர்நாள் ஓங்கிடுமே!
புண்ணிம் புரியும் புனிதர்க்குப்
பேர்புகழ் நன்கு பெருகிடுமே!

நல்லன செய்து நல்லோராய்
நானில் மீதில் வாழ்ந்திடுவோம்.
அல்லல் யார்க்கும் செய்யாத
அருமை மனிதர் ஆகிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோம்பல் தவிர்ப்போம்

சோம்பிக் கிடக்கும் மனிதர்களைச்
செகமும் செத்தோர் என்றிடுமே!
ஆம்நாம் சோம்பல் கொள்வதனை
ஆகாச் செயலாய்த் தவிர்ப்போமே!

முயற்சி அற்றுச் சோம்பிடுவோர்
மேன்மை தன்னை இழந்திடுவர்
தயவைப் பிறரிடம் கேட்கின்ற
தரக்கீழ் நிலைக்குச் சென்றிடுவர்.

சோம்பல் தன்னைத் தவிர்த்திடுவோர்
சுகந்தம் வாழ்வில் கண்டிடுவர்
ஆம்பல் மலராய் மகிமைதனை
அதிகம் வாழ்வில் பெற்றிடுவர்.

துடிப்பாய் நன்கு செயலாற்றின்
தூரமாய்ச் சோம்பல் சென்றிடுமே!
விடிவும் இதனால் விரைந்தேதான்
வந்திடும் அவர்க்குப் புரிவோமே!

சோம்பல் நீக்கி வாழ்வோர்க்கு
சிறப்பாய் வாழ்வும் அமைந்திடுமே!
பூம்பொழில் என்றே அவர்வாழ்வு
பெரிதாம் அழகாய் ஆகிடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமை காத்து நடப்போம்

கடமையில் என்றும் கரிசனையாய்
காலம் பூராய் இருந்திடுவோம்.
திடமாய்க் கடமை காத்தேதான்
தரத்தில் உயர்வைப் பெற்றிடுவோம்.

கடமை தவறி நடந்திடிலோ!
கீழ்நிலை கிட்டும் புரிந்திடுவோம்.
நடத்தையில் என்றும் கடமைதனை
நாளும் நன்கு பேணிடுவோம்.

சிறுவர் கடமை கல்விதனை
சிறப்பாய்க் கற்றல் தெரிந்திடுவோம்.
முறையாய் நாமும் கற்றெங்கள்
முக்கிய கடமையை ஆற்றிடுவோம்.

நன்னெறி பற்றி நடப்பதுவும்
நன்றாம் கடனாய்ப் புரிந்திடுவோம்.
என்றும் நேர்வழி பற்றியேதான்.
ஏற்றம் நாமும் அடைந்திடுவோம்.

கடமையை நன்கு செய்தேதான்.
காத்திர உயர்வைக் கண்டிடுவோம்.
நெடுநில வாழ்வில் நல்லுயர்வை
நிச்சயம் நாமும் பெற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயவர் உறவைத் தவித்திடுவோம்

கயவர் உறவை சிறுவர் நாம்
கனவிலும் காணா திருந்திடுவோம்.
உயரிய மாந்தர் நாமாக
உணர்ந்தே என்றும் நடந்திடுவோம்.

நல்லார் உறவு எங்களுக்கு
நன்மை தன்னை நல்கிடுமே!
பொல்லார் உறவோ பெருந்தீங்காய்ப்
பெரிதும் எமக்கு ஆகிடுமே!

பூவுடன் சேர்ந்த நாரதுவும்
புதுமணம் பெற்றிடும் புரிவோமே!
ஆவலாய் நாமும் நல்லோரை
அணுகி மேன்மை அடைவோமே!

நல்லோர் என்றே கயவர்களும்
நடிப்பதும் உண்டு புரிந்திடுவோம்.
எல்லாம் ஆய்ந்தே நட்பதனை
எழிலே நாமும் தேர்ந்திடுவோம்.

பாம்புடன் பழகின் தீண்டிடுமே!
பாதகம் எமக்கு ஆகிடுமே!
ஆம்நாம் ஆய்ந்தே நல்லோரின்
அருமை உறவைக் காப்போமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறருக்கு தீங்கு செ ...

பிறர்க்குத் தீங்கு புரி...
பாதகம் தவிர்த்தே ... ...ாம்.
கறையே கொண்ட செயல்களினைக்
கடுமை யாக வெறுத்திடுவோம்.

அடுத்தோர் சொத்தை அபகரித்தல்
ஆகா தென்றே தவிர்த்திடுவோம்.
கெடுதல் எவர்க்கு எண்ணுவதும்
கொடுமை என்றே கருதிடுவோம்.

மற்றவர் உயர்வைத் தடுக்கின்ற
மாபெரும் தீங்கை விட்டிடுவோம்.
பற்றுடன் பிறரின் நலனுக்குப்
பெரிதும் உதவி புரிந்திடுவோம்.

தீங்கை பிறருக்கு புரிகின்ற
தீதாம் எண்ணம் விட்டிடுவோம்.
பாங்குடன் இயன்ற உதவிகளைப்
புரிவதில் பிரியம் கண்டிடுவோம்.

பிறரின் நலனை நம்நலனாய்ப்
பெரிதும் பேணி நடந்திடுவோம்.
முறையாய்ப் பிறர்க்கு உதவுவதில்
மகிழ்வே நாமும் கண்டிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகத்தின் மகிமை

உன்னத அறிவின் ஊற்றிடமாம்
உயரிய நல்ல புத்தகமாம்.
என்றும் மகிமைத் தத்துவமாம்.
ஏற்றம் மிக்க புத்தகமாம்.

உலக அறிவு அனைத்தினதும்
உருவாய்த் திகழ்வதும் புத்தகமே!
பலனைப் பெரிதாய் அளிப்பதனால்
பாரினில் மேன்மையும் புத்தகமே!

உலகப் பல்கலைக் கழகமென
உயர்வும் பெற்றது புத்தகமே!
நலனை மனிதர்க் களிப்பதிலே
நன்றாம் இடமும் புத்தகமே!

உன்னத செல்வம் என்றேதான்
உயரிய நூல்களை வாங்கிடுவோம்.
நன்றே அதனை வாசித்து
ஞானம் நிறையப் பெற்றிடுவோம்.

அறிவின் களஞ்சியம் எனநூல்கள்
ஆன நிலையும் அறிவோமே!
நிறைய நூல்கள் படித்தே நாம்
நிலத்தில் மேதைகள் ஆவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி ஒழுங்கைப் பேணிடுவோம்

வீதி ஒழுங்கைப் பேணிடுவோம்.
விபத்தின் தாக்கம் தவிர்த்திடுவோம்.
பாதை தனிலே பக்குவமாய்ப்
பார்த்தே நாமும் நடந்திடுவோம்.

தக்க கவனம் இல்லாததால்
தானே விபத்தும் நடக்கிறது.
மக்கள் வீதி விதிகளினை
மேவி நடப்பின் விபத்தணுகா.

எத்தனை உயிர்கள் விபத்தினிலே
ஏனோ! வீணாய் மாய்கிறதே!
இத்தகு அழிவு எல்லாமும்
இங்கே இன்றிப் போகாதோ!

பயணம் பாதையில் செய்கையிலே
பாதை விதிப்படி சென்றிடுவோம்.
நியதி பற்றி நடந்தேதான்
நாமும் விபத்தைத் தவிர்த்திடுவோம்.

விபத்துக் குறைந்த நிலையினிலே
விளங்க நாட்டைச் செய்திடுவோம்.
நபர்கள் வீதி ஒழுங்கின்படி
நடத்தலும் கடனே என்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரம் காப்போம்

எதற்கும் அஞ்சும் தன்மைதனை
என்றும் தவிர்த்து நடந்திடுவோம்.
நிதமும் சிறுவர் நாங்களுமே
நன்றாய் வீரம் காத்திடுவோம்.

கொடுமை களுக்கு அஞ்சாமல்
கிளர்ந்தே எதிர்த்து ஜெயித்திடுவோம்.
அடிமை போன்ற மனநிலைகள்
ஆகா தென்றெ தவிர்திடுவோம்.

பாவச் செயல்கள் செய்வதற்கோ
பயமே நாமும் கொண்டிடுவோம்.
ஆவல் கொண்டே கெடுமைகளை
அகற்ற என்றும் முயன்றிடுவோம்.

உன்னத வீரன் என்றேதான்
உயரிய நாமம் பெற்றிடுவோம்.
நன்றாம் வீரச் செயல்களினை
நாமும் நாடிச் செய்திடுவோம்.

கோழை என்ற நிலை எம்மில்
குடியே ஆகா அகற்றிடுவோம்.
வாழும் காலம் எல்லாமும்
வளமாய் வீரம் காத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடலைக் காப்போம்

நாமும் வாழும் சூழலினை
நாளும் நன்கு காப்போமே!
ஆமாம் சூழல் காத்தேதான்
அழிவுகள் நிகழாத் தடுப்போமே!

சுற்றா டல்தன்னைக் காப்பதிலே
சுகந்தம் நாமும் காண்போமே!
பற்றாய் சூழல் காப்பதனைப்
பழக்க மாகக் கொள்வோமே!

மண்ணின் மகிமை மேலோங்க
மனமே உவந்து சூழலினை
இனிதாய் நாமும் காப்போமே!
இன்பம் இதனில் காண்போமே!

சூழல் இங்கே மாசுற்றால்
துன்ப நிலைமை தோன்றிடுமே!
ஆழ மாகச் சிந்தித்தே
அதனைத் தடுக்க முயல்வோமே!

எங்கள் வீட்டின் நலன்என்றே
என்றும் சூழலைப் பேணிடுவோம்.
பங்கம் அணுகா முறையினிலே
பக்குவ மாகக் காத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் நன்னெறி மாலை

சிறுவர் நன்னெறி மாலையினைத்
சிரத்தை யுடனே படித்திடுவோம்.
குறையே இன்றி நன்னெறியைக்
கூறும் இதன்படி நடந்திடுவோம்.

இறையின் நினைவை இதயத்தில்
இனிதே என்றும் இருத்திடுவோம்.
கறையின் செயல்கள் அனைத்தையுமே
கனவிலும் வெறுத்தே நடந்திடுவோம்.

ஈன்ற தாயைப் பேணுவதில்
ஈடிலா இன்பம் கண்டிடுவோம்.
ஆன்றோர் கூற்றை ஏற்றேதான்
அழகே வாழ்வில் உயர்ந்திடுவோம்.

தந்தையை எங்கள் சிந்தையிலே
தினமும் தரித்தே மதித்திடுவோம்.
எந்த இடரே வந்திடினும்
எளிலே ஏற்று ஜெயித்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாய்க் கருதிக் கல்வியினைக்
கற்றே வாழ்வில் உயர்ந்திடுவோம்.
கண்ணியம் காத்து வாழ்வதிலே
கரிசனை அதிகம் காட்டிடுவோம்.

அறிவினைப் புகட்டும் ஆசான்களை
அகத்தில் இருத்தி மதித்திடுவோம்.
நெறிமுறை மீறா வகையினிலே
நிலத்தினில் என்றும் நடந்திடுவோம்.

நாவினைப் காக்கும் விடயத்தில்
நன்றாம் இடத்தில் இருந்திடுவோம்.
நோவினை பிறர்க்குச் செய்யாமல்
நன்றே என்றும் திகழ்ந்திடுவோம்.

அடுத்தவர் சொத்தை அபகரிக்கும்
ஆசையை என்றும் தவிர்த்திடுவோம்.
வடுவது வாழ்வில் வந்திடாத
வகையினில் என்றும் துலங்கிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலச் சிந்தை தனில்என்றும்
சற்றும் மூழ்கா திருந்திடுவோம்.
தயவினை நாடி நிற்கின்ற
தன்மையும் நீக்கி வாழ்ந்திடுவோம்.

உயரிய நல்ல சிந்தைதனை
உளத்தினில் என்றும் நிறைத்திடுவோம்.
துயரம் நேர்ந்த போதினிலும்
துவண்டு போகா திருந்திருவோம்.

உத்தமத் தன்மை யாவையுமே
உயர்வாய்ப் பற்றித் திகழ்ந்திடுவோம்.
வித்தகம் தன்னில் என்றும் நாம்
வாஞ்சை அதிகம் கொண்டிடுவோம்.

மாற்று மதங்கள் யாவினையும்
மதித்தே என்றும் நடந்திடுவோம்.
ஆற்றல் மிக்க சிறுவர் என
அயர்வு நீக்கித் திகழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் பற்று மிக்கோராய்
நாமும் நன்கே இருந்திடுவோம்.
வாட்டும் வேதனை வந்திடினும்
வருந்தா நிலையில் ஏற்றிடுவோம் .

பொல்லார் உறவைத் தவிர்த்தேதான்
புனிதம் காத்து வாழ்ந்திடுவோம்.
நல்லார் தொடர்பை நாட்டமுடன்
நாடி நாமும் பேணிடுவோம்.

நெடுநில வாழ்வில் என்றும்நாம்
நீதி நெறியைப் பற்றிடுவோம்.
கெடுதல் யார்க்கும் செய்யாமல்
கண்ணியம் காத்து வாழ்ந்திடுவோம்.

புல்லரைப் புனிதர் என்றேதான்
புகழ்வதை வாழ்வில் தவிர்த்திடுவோம்.
நல்லவர் தம்மில் நேசத்தை
நாமும் நன்கே செலுத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகம் இல்லா நல்லோராய்
வையகம் மீதில் வாழ்ந்திடுவோம்.
நெஞ்சகம் தன்னைத் தூய்மையினால்
நிறைத்து என்றும் வாழ்ந்திடுவோம்.

உண்மையை உயிராய்க் கருதிநாமும்
உயர்வாய் உலகில் நடந்திடுவோம்.
புண்ணிய செயல்கள் புரிந்தே தான்
புவியினில் புகழும் பெற்றிடுவோம்.

வறியவர்க் குதவிடும் விடயத்தில்
வாஞ்சை அதிகம் கொண்டிடுவோம்.
நெறிமுறை தவறா நிலையினிலே
நிலத்தினில் நன்கே நடத்திடுவோம்.

மதிக்கா இடத்துச் செல்வதனை
மிகவும் தவிர்த்து நடத்திடுவோம்.
சதிகள் செய்யும் எண்ணங்கள்
சற்றும் இன்றித் திகழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் குறையை ஆய்ந்திடுதல்
மடமை என்றே கருதிடுவோம்.
உற்றார் உறவார் தமையெல்லாம்
உயர்வுற மதித்து வாழ்ந்திடுவோம்.

நல்லோர் உளத்தில் நற்பெயரை
நாளும் நன்கே பெற்றிடுவோம்.
பொல்லார் உறவை வாழ்வினிலே
பெரிதும் தவிர்த்தே திகழ்ந்திடுவோம்.

வேசம் போட்டு வாழ்வோரை
வாழ்வில் நன்கே விளங்கிடுவோம்.
ஆசை கொண்டே நற்செயலை
அதிகம் ஆற்ற முயன்றிடுவோம்.

அறச்செயல் யாவும் ஆற்றுவதில்
அதிக அக்கறை காட்டிடுவோம்.
கறையின் செயல்கள் எல்லாமும்
கலைந்தே வாழ்வில் உயர்வுறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தின் பக்கம் சாய்கின்ற
பண்பை என்றும் தவிர்த்திடுவோம்.
குணத்தின் குன்று என்றேதான்.
குவலய மீதில் பேர்பெறுவோம்.

பலத்துக் கடங்கி போகின்ற
பண்பை வாழ்வில் தவிர்த்திடுவோம்.
நலமே பிறர்க்குச் செய்கின்ற
நன்றாம் பண்பைப் பற்றிடுவோம்.

மனிதத் தன்மை மிகைத்தோராய்
மண்ணில் என்றும் மிளிர்நதிடுவோம்.
இனிய நல்ல பண்புகளின்
இருப்பிடம் என்று ஆகிடுவோம்.

அமைதி தன்னை உவக்கின்ற
அகமே பெற்றுத் திகழ்ந்திடுவோம்.
எமது நோக்கம் எல்லாமும்
எழிலாம் பண்பே என்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோர் தம்மை மதிப்பதிலே
மேலாம் நிலையில் இருந்திடுவோம்.
நதியும் பயிர்க்கு உதவுதல்போல்
நாமும் பிறர்க்கு உதவிடுவோம்.

முயற்சி இன்றி முயலாமல்
முடங்கிக் கிடத்தல் தவிர்த்திடுவோம்.
உயர்ச்சி தன்னை அடைவதற்காய்
உயர்வாம் பணிகள் ஆற்றிடுவோம்.

பொறாமைத் தனத்தைத் தவிர்த்தேதான்
புனிதம் பேணிக் காத்திடுவோம்.
கறைச்செயல் செய்தல் தவிர்த்திங்கு
கண்ணியம் பெற்று வாழ்ந்திடுவோம்.

மதுவினை நாடும் பழக்கத்தை
மடமை என்றே கருதிடுவோம்.
நிதமும் வாழ்வில் நிம்மதியை
நல்ல நடத்தையால் பெற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிப்பாய் என்றும் செயலாற்றும்
தன்மையில் ஓங்கி நின்றிடுவோம்.
கடினம் என்று எதனையுமே
கருதா நிலையில் இருந்திடுவாம்.

கொள்கையில் உறுதி மிக்கோராய்
குவலய மீதில் புகழுறுவோம்.
கள்ளமே இல்லாச் சிந்தையினால்
காசினி மீதில் களிப்புறுவோம்.

விதியே என்று நடப்பதனை
விதப்புரை செய்யா திருந்திடுவோம்.
அதிகம் முயன்று அவற்றையெல்லாம்
அடக்கி வெற்றி கண்டிடுவோம்.

அதிகம் நூல்கள் கற்றேதான்
அறிவின் உச்சம் சென்றிடுவோம்.
புதிய நல்ல கருத்துரையும்
புத்தகம் மூலம் பெற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகந்தை இன்றி வாழ்வினிலே
அடக்கம் பேணி நடந்திடுவோம்.
பகரும் வாயின் வார்த்தையினில்
பக்குவ நிலையைக் காத்திடுவோம்.

பணிவினை வாழ்வில் பற்றியென்றும்
பண்பினில் உயர்ந்து நின்றிடுவோம்.
அணியென எங்கள் வாழ்வுக்கு
அறநெறி தன்னைப் பற்றிடுவோம்.

உயிரினை விடவும் மானமது
உயரிய தென்று உணர்ந்திடுவோம்.
அயர்வே இன்றி வாழ்வினிலே
அல்லும் பகலும் முயன்றிடுவோம்.

குறுகிய சிந்தை அற்றோராய்க்
குவலய மீதில் வாழ்ந்திடுவோம்.
பரந்த நோக்கில் எதனையுமே
பார்த்திடும் பண்பைப் பெற்றிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி அடங்கும் தன்மையது
அற்ற நிலையில் திகழ்ந்திடுவோம்
விஞ்சிய வீரம் உள்ளோராய்
வையகம் மீதில் வாழ்ந்திடுவோம்.

தீர எதையும் விசாரிக்கும்
தனியாம் தன்மை பெற்றிடுவோம்.
பாரம் என்று எதனையுமே
பார்க்கா நிலையில் இருந்திடுவோம்.

கற்றவர் தமக்குக் கண்ணியத்தை
கூடிய அளவு கொடுத்திடுவோம்.
மற்றவர் மானம் காப்பதிலே
மேலாம் நிலையில் இருந்திடுவோம்

உடலின் நலனைப் பேணுவதில்
உரிய சிரத்தை எடுத்திடுவோம்.
நடத்தைகள் தன்னில் நேர்மைதனை
நாளும் பற்றிப் பிடித்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகர் உறவைத் தவிர்த்தேதான்
வாய்மை வழியில் நிலைத்திடுவோம்.
நெஞ்சினில் தூய்மையை நிறைத்தேதான்
நல்லோர் என்றே திகழ்ந்திடுவோம்.

நாட்டு நலனைக் காப்பதிலே
நன்றாய் நாளும் பணிசெய்வோம்.
வீட்டுச் சூழலைச் சுத்தமுடன்
வைத்தே நோய்களைத் தவிர்த்திடுவோம்.

மற்றவர் அவலம் காணுகையில்
மனமே உருகி இரங்கிடுவோம்.
அற்பர் பவுசு பெறும்செயலை
ஆகா தென்றே தடுத்திடுவோம்.

தலைமை தகுதியின் நபர்க்கென்ற
தக்க கொள்கை கொண்டிடுவோம்.
நிலையிலாக் கொள்கை தவிர்த்தேதான்
நிலமிசை என்றும் திகழ்ந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மிக்க மனிதரென
நன்கே நாமும் இருந்திடுவோம்
வன்செயல் தன்னை வாழ்வினிலே
வெறுத்தே என்றும் நடந்திடுவோம்.

இயலா தென்றே இயம்புகின்ற
இழிவாம் நிலையைத் தவிர்த்திடுவோம்.
முயலா முடங்கி இருப்பதனை
முற்றாய் நீக்கி உயர்ந்திடுவோம்.

அச்சம் அடையும் தன்மைதனை
அகற்றி வீரம் காத்திடுவோம்.
துச்சம் என்றே துட்டர்களைத்
துணிந்து எதிர்த்தே ஜெயித்திடுவோம்.

தப்பாம் செய்கை யாவினையும்
தவிர்த்தே வாழ்வில் மிளிர்ந்திடுவோம்.
எப்போ! எந்த வேளையிலும்
எழிலாம் கொள்ளை காத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரின் உழைப்பில் வாழ்வதனைப்
பெரிதாய் நாமும் வெறுத்திடுவோம்.
புறமே பேசும் செயலதனைப்
பாரிய பாவம் என்றிடுவோம்.

எல்லாம் உண்மை எனஏற்றல்
ஏற்றம் அற்றது என்றிடுவோம்.
நல்லன வற்றை என்றும்நாம்
நாடிடும் தன்மை கொண்டிடுவோம்.

ஒற்றுமை தன்னை என்றும் நாம்
உயர்வாய்ப் பற்றி வாழ்ந்திடுவோம்.
மற்றவர் களுக்குத் தீங்கதனை
மனதால் கூடத் தவிர்த்திடுவோம்.

பிறருக் கீயும் தன்மையிலே
பிரியம் அதிகம் கொண்டிடுவோம்.
அறத்தின் செயல்கள் அத்தனையும்
அகமே உவந்து செய்திடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதந்திகள் எல்லாம் உண்மையென
வாழ்வினில் நம்பா திருந்திடுவோம்.
பதவிகள் உயர்ந்த போதினிலும்
பழையவை மறவா திருந்திடுவோம்.

பொறுமையைப் பற்றி நடப்பதனால்
பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்திடுவோம்.
குறுகிய சிந்தையை நீக்கியேநாம்
கூடிய புகழை அடைந்திடுவோம்.

கொடுத்த வாக்கை நாம் என்றும்
கருதி நன்கே காத்திடுவோம்.
எடுத்த எந்தச் செயலினையும்
ஏற்றமாய்ச் செய்தே முடித்திடுவோம்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர் மனதில் நாளும்நற்
சிந்தனை உருவே ஆவதற்கு
நெறிமுறை தன்னைக் காட்டிடுதல்
நன்றாம் கடனாம் பெரியோர்க்கு.
அறநெறி அவர்கள் உள்ளத்தில்
ஆழ மாகப் பதிந்திட்டால்
கறைமிகு காரியம் செய்வதற்குக்
கனவிலும் நாடிட மாட்டார்கள்
நிறைய இந்த எண்ணங்கள்
நெஞ்சினில் எனக்கு நிறைந்திடவே
சிறப்பாம் சிறுவர் பாடல்களைச்
சிரத்தை கொண்டே யாத்திட்டேன்
குறையே இல்லா முறையினிலே
குறித்த இந்தப் பாடல்களை
சிறுவர் கவிப்பேழைஎன்னும்
சிறப்பாம் நூலில் தந்திட்டேன்
முறையாய் இதனைப் பெற்றோரே !
மேலாம் உங்கள் சேய்களுக்குப்
புரிந்திடும் வகையில் புகட்டிடுவீர்
புகழ்ச்சியும் இதனால் பெற்றிடுவீர்

காப்பியக் கதிரோன். எம்.எம்.ஏ. அஸீஸ்

ISBN-978-955-38066-5-9
9 7 8 9 5 5 3 8 0 6 6 5 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org